# ஆகமம்

- ஆகமம் என்ற சொல்லை ஆ கமம் எனப் பிரிக்கலாம்.
  ஆ - ஆன்மாக்களின்
  கமம் - பாசங்களை நீக்கம் செய்து முத்திப் பேற்றை அருளுவது.
- இறைவனது ஐந்து முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின வென்ற காரணத்தை ஆகமத்தால் அறிகிறோம்.

| | |
|---|---|
| சத்யோஜாத முகம் (ஐந்து) | 1. காமிகம்<br>2. யோகஜம்<br>3. காரணம்<br>4. அஜிதம்<br>5. சிந்தியம் |
| வாமதேவ முகம்(ஐந்து) | 1. தீப்தம்<br>2. அம்சுமான்<br>3. குஷ்மம்<br>4. சுப்ரபேதம்<br>5. ஸஹஸ்ரம் |
| அகோர முகம்(ஐந்து) | 1. விஜயம்<br>2. அநலம்<br>3. நிச்வாசம்<br>4. வீரம்<br>5. சுவாயம்புவம் |
| தத்புருஷ முகம்(ஐந்து) | 1. ரௌரவம்<br>2. சந்திர ஞானம்<br>3. மகுடம்<br>4. பிம்பம்<br>5. விமலம் |
| ஈசான மதம் (எட்டு) | 1. ப்ரோத்கீதம்<br>2. சர்வோக்தம்<br>3. இலளிதம்<br>4. சித்தம்<br>5. கிரணம்<br>6. சந்தானம்<br>7. பாரமேச்வரம்<br>8. வாதுளம் |

## இருபத்தெட்டு ஆகமங்கள்:

- பத்து ஆகமங்கள் சிவ பேதங்களாகும்.
- பதினெட்டு ஆகமங்கள் ருத்ர பேதங்களாகும்.
- சரியாபாதத்தில் பூஜைக்குரிய பொருள்களைச் சேகரித்தலும், பூஜை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

  கிரியாபதத்தில் கர்ணம் (உழுதல்) முதல் பிரதிஷ்டைவரையில் உள்ள கிரியைகளும், நித்திய நைமித்திக பூஜைகளும் திருவிழா முறைகளும், சமய, விசேஷ நிர்வாண தீட்சை விதிகளும் கூறப்பட்டுள்ளன.
- யோகபாதத்தில் ஆன்ம சுத்தி, அந்தர் யாகம்
- ஞானபாதத்தில் பதி, பசு, பாச இலக்கணங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

  தசகாரியங்களது இலக்கணங்கள்
- தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆத்ம ரூபம், ஆத்ம தரிசனம், ஆத்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம்.

## வைணவாகமங்கள்

- ஸ்ரீமந் நாராயணனாகிய விஷ்ணுவை பரதேவதையாகக் கூறும் ஆகமங்கள் வைணவாகமங்களாகும். வைணவாகமங்கள் பாஞ்சராத்ராகமம் எனவும், வைகானஸாகமம் எனவும் இருவகைப்படும். பாஞ்சராத்ராகமம் பல ரிஷிகளின் மூலமாகவும், வைகானஸாகமம் விகனஸர் என்ற மகரிஷியின் மூலமாகவும் உபதேசிக்கப்பட்டன.

- இவ்விரு ஆகமங்களுக்கும் அதிக பேதமில்லை. ஆனால், ஆலய பூஜாவிதிகளிலும், தினசரியைகளிலும் சிறிது பேதமுண்டு.
- பாஞ்சராத்ரஸம் ஹிதைகளின்படி மேலக்கோட்டை என்கிற திருநாராயணபுரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் என்ற மூன்று ஆலயங்களிலும் பூஜை முதலியன நடைபெற்று வருகின்றன.
- திருப்பதி கோவில் வைகானஸ ஆகமத்தை ஒட்டி, நடந்துவருகிறது. ஒரு யாகத்தின் இடையில் ஐந்து இரவுகளில் பகவானால் உபதேசிக்கப்பட்டதால் பாஞ்சராத்ரம் எனப் பெயர் பெற்றது எனவும் கூறுவர். இவ்வாகமத்தில் பஞ்ச பூதங்கள், பஞ்ச தன்மாத்திரைகள், அஹங்காரம், புத்தி, அவ்வியக்தம் என ஐந்து பாகங்கள் விளக்கப்பட்டுள்ளன
- இப்பாஞ்சராத்ராகமங்களில் தேவாலயங்களுக்கென்று ஏற்பட்ட தலங்கள், தேவாலய நிர்மாணங்கள், விக்கிரகப் பிரதிஷ்டாக் கிரமங்கள், பூஜாகாலங்கள், பூஜாதிரவியங்கள், உத்ஸவாதிகள், ஸம்ப்ரோட்சணாதிகள், பூஜை செய்பவர்களின் யோக்கியதாம்சங்கள், அவர்களுக்கு ஏற்பட்ட தீட்சை முதலியவைகள் விளக்கப்பட்டுள்ளன.
- ஆகமங்களால் சொல்லப்படும் பொருள்களில் மிகவும் முக்கியமானவை மந்திரங்களும், தந்திரங்களும் (முத்திரைகளும்) ஆகும். இவை ஆலய நித்திய, நைமித்திக பூஜைகளுக்கு இன்றியமையாத சாதனங்களாகும்.

------*****-----*****----